DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | | |
| Miscellaneous | | |
| Preliminary Register | | |
| Sessions | | **S.C.No. 117/2018** |
| Depositions of Witness for | | Prosecution Pw 10 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு. வெள்ளத்துரை |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of November 2025.

**(Accused absent. Petition filed and allowed. )**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தட்டப்பாறையில் வசித்துவருகிறேன். தீயணைப்பு துறையில் பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரி நல்லமலையை எனக்கு தெரியாது. அ.சா.1 தெய்வ சுந்தர பாண்டியனை எனக்கு தெரியும், அவர் எனது உறவினர். சாட்சி கணேசன் எனது தம்பி, சாட்சி கணபதி தேவர் எனது மாமா ஆவார்கள். மற்ற சாட்சிகளை எனக்கு தெரியாது. இந்த

வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. இந்த வழக்கு சம்பவத்தில் எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது)

**<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது, ஆஜர் எதிரியை எனக்கு தெரியும் என்றும், எனக்கும் தெய்வசுந்தரபாண்டியன் என்ற எனது உறவினருக்கும் பணத்தேவை இருந்த காரணத்தினால் இவ்வழக்கின் எதிரி நல்லமலை என்பவரிடம் 2 லட்ச ரூபாயை கொடுத்து 4 லட்ச ரூபாய் கருப்பு பணம் வாங்கிக்கொள்ள திட்டமிட்டோம் என்றும், ஆனால் எதிரி 4 லட்ச ரூபாயை பேசியதுபோல் கொடுக்காத காரணத்தினால் அவரை நானும், எனது உறவினர்களும், நண்பர்களும், சாட்சி தெய்வசுந்தரபாண்டியனும் சேர்ந்து தாக்கினோம் என்றும், அதன் தொடர்ச்சியாக இவ்வழக்கின் எதிரி தன்னிடமிருந்த துப்பாக்கியை எடுத்து சுட்டதில் எனக்கு படுகாயம் ஏற்பட்டது என்றும், இது சம்பந்தமாக சாட்சி தெய்வசுந்தரபாண்டியன் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 117/2018**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw 11 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு. ஸ்ரீரங்கம் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of November 2025.

**(Accused absent. Petition filed and allowed. )**

**<u>முதல் விசாரணை</u>**

நான் திருநெல்வேலியில் வசித்துவருகிறேன். டீக்கடை வைத்து வியாபாரம் செய்கிறேன். இவ்வழக்கின் எதிரி நல்லமலையை எனக்கு தெரியாது. அ.சா.1 தெய்வ சுந்தர பாண்டியனை எனக்கு தெரியாது. மற்ற சாட்சிகளை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது)

**<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது, இவ்வழக்கின் எதிரி நல்லமலை என்பவரும் சாட்சி தெய்வசுந்தரபாண்டியன் மற்றும் அவரது நண்பர்கள் தங்களது பணத்தேவையின் காரணமாக 2 லட்ச ரூபாயை கொடுத்து 4 லட்ச ரூபாயை கருப்பு பணமாக பெற முயற்சி செய்தார்கள் என்றும், ஆனால் நல்லமலை பேசியது போல் பணத்தை திரும்ப கொடுக்காத காரணத்தினால் தெய்வசுந்தரபாண்டியன் மற்றும் அவரது நண்பர்கள் நல்லமலையை தாக்கினார்கள் என்றும், அதன் தொடர்ச்சியாக நல்லமலை தன்னிடமிருந்த துப்பாக்கியால் சுட்டதில், சாட்சி வெள்ளத்துரைக்கு படுகாயம் ஏற்பட்டது என்றும், இந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 117/2018**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw 12<br>Defence<br>Court |
| Name | : | திரு. பரமசிவன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of November 2025.

**(Accused absent. Petition filed and allowed. )**

**முதல் விசாரணை**

நான் அண்ணாமலைபுதூரில் வசித்துவருகிறேன். கூலி வேலை செய்துவருகிறேன். இவ்வழக்கின் எதிரி நல்லமலையை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். சுமார் 9 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் நானும், எனது சித்தப்பா காளிச்சாமி தேவரும் ஊத்துமலை காவல்நிலையம் சென்றபோது, அங்கிருந்த போலீசார் கேட்டுக்கொண்டதன்

பேரில் நாங்கள் இருவரும் மேற்படி கையொப்பங்களை போட்டுக்கொடுத்தோம். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள என்னுடைய கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 3 ஆகும். அத்தாட்சியில் உள்ள என்னுடைய கையொப்பம் அ.சா.ஆ. 4 ஆகும். என்னுடன் மேற்படி ஆவணங்களில் சாட்சி கையொப்பமிட்ட என்னுடைய சித்தப்பா சுமார் 7 வருடங்களுக்கு முன்னர் இறந்துவிட்டார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது)

<u>**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது, கடந்த 06.03.2016 ம் தேதி மதுரை மாவட்டம், உசிலம்பட்டியை சேர்ந்த இவ்வழக்கின் எதிரி நல்லமலையை போலீசார் திருநெல்வேலி ஹைகிரவுண்ட் மருத்துவமனை அருகே கைது செய்து விசாரித்தபோது, தெய்வசுந்தரபாண்டியன் மற்றும் அவரது நண்பர்கள் தங்களது பணத்தேவையின் காரணமாக 2 லட்ச ரூபாயை கொடுத்து 4 லட்ச ரூபாயை கருப்பு பணமாக பெற முயற்சி செய்தார்கள் என்றும், ஆனால் தன்னால் பேசியது போல் பணத்தை திரும்ப கொடுக்காத காரணத்தினால் தெய்வசுந்தரபாண்டியன் மற்றும் அவரது நண்பர்கள் தன்னை தாக்கினார்கள் என்றும், அதன் தொடர்ச்சியாக தான் தன்னிடமிருந்த துப்பாக்கியால் சுட்டதில், வெள்ளத்துரைக்கு படுகாயம் ஏற்பட்டது என்றும் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், தன்னிடம் உள்ள 2 துப்பாக்கி தோட்டாக்களையும், தெய்வசுந்தரபாண்டியன் தன்னிடம் கொடுத்த 10 காசோலைகளையும் ஆஜர் செய்வதாக கூறினார் என்றும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை ஊத்துமலை காவல் ஆய்வாளர் என் முன்னிலையிலும், சாட்சி காளிச்சாமி தேவர் முன்னிலையிலும் பதிவுசெய்தார் என்றும், அதன் அடிப்படையில் அத்தாட்சி பிறப்பித்து துப்பாக்கி தோட்டாக்களை ஆய்வாளர் கைப்பற்றினார் என்றும், அந்த அத்தாட்சியில் நாங்கள் சாட்சிகளாக கையொப்பமிட்டோம் என்றுசொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi